செ.வெ.எண்: 20 நாள்: 10.07.2020

# அரியலூர் மாவட்டம்
# அரியலூர் நகராட்சியில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டு, தடைசெய்யப்பட்ட பகுதியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு.

அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தடைசெய்யப்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக கிருமி நாசினி மூலம் சுத்தப்படுத்தும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (10.07.2020) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு அமலுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, மாவட்ட நிர்வாகத்தின் மூலம் கொரோனா வைரஸ் தடுப்பு நடைவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி அரியலூர் மாவட்டத்தில் உள்ள அரியலூர் நகராட்சி, ஜெயங்கொண்டம் நகராட்சி ஆகிய நகராட்சி பகுதிகளில் அனைத்து வீடுகள் மற்றும் கடைகள், பொது இடங்களில் கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

அரியலூர் நகராட்சிக்குட்பட்ட எம்.பி.கோவில் தெருவில் உள்ள கடைவீதியில் தனியார் கடையில் பணிபுரிந்த 2 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதைத்தொடர்ந்து, அப்பகுதியை தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு, அப்பகுதியில் தினமும் நான்கு முறை கிருமி நாசினி தெளிக்கப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அப்பகுதிக்குள் பொதுமக்கள் வராத வண்ணம் தடுப்பு கட்டைகள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து, கொரோனா தொற்று ஏற்பட்ட நபருடன் தொடர்பில் உள்ளவர்களுக்கு மாதிரிகள் எடுக்கப்பட்டு வருகிறது. தொடர்பில் இருந்தவர்கள் தாமாக முன்வந்து பரிசோதனை செய்துக்கொள்ளவும்.

இப்பகுதியில் உள்ள 300 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள நபர்களுக்கும் பரிசோதனை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பகுதி முழுவதும் மருத்துவக்குழுவினரின் கண்காணிப்பில் உள்ளது.

பொதுமக்கள் அனைவரும் சமூக இடைவெளியினை கடைபிடித்து, வெளியில் வரும்போது கண்டிப்பாக முககவசம் அணிந்து வர வேண்டும். எனவே, பொதுமக்கள் தமிழ்நாடு அரசு கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளுக்கு எடுக்கப்பட்டு வரும் அனைத்து நடவடிக்கைகளுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்தஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.ஜெயினுலாபதீன், கோட்டாட்சியர் ஜெ.பாலாஜி, நகராட்சி ஆணையர் குமரன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) வீ.சி.ஹேமசந்த்காந்தி, வட்டாட்சியர் சந்திரசேகரன், காவல்துறையினர் மற்றும் தூய்மைப்பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**